[2013 மே 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அங்கே தூர் வாருவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவிலே அவருடைய கோரிக்கை நிறைவேறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 463, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

463—

கால்நடை மருத்துவமனை

***5080—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சி, சாதிநாயக்கன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சாதிநாயக்கன்பட்டி கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கால்நடைகளின் அலகு ஏறக்குறைய 3,000–க்கு மேல் இருப்பதால் அங்கே ஒரு கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறு உள்ளது. எனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அங்கே ஒரு கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

2013 மே 10]

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர்தம் வழித் தோன்றலாய் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று வாழ்ந்து காட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழ் காத்து, பொற்கால ஆட்சி நடத்திவரும் பொன்மனத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்துவருகின்ற அதீத முயற்சியால் தமிழக மக்கள் எவரும் இடம்பெயர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், அப்பகுதி மக்களையும் பார்வையிட வந்த மத்திய அரசின் நிபுணர் குழுவின் தலைவர் திரு. பர்வேஷ் சர்மா மற்றும் குழுவினர் பாராட்டிச் சென்றுள்ளனர்.

முற்பகல் 10—50

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழ்மிக்க ஆட்சிக்கு மத்திய நிபுணர் குழு ஆய்வு செய்த பின்னர் பாராட்டு தெரிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் பாதுகாக்க தாயாக நானிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்கின்ற முதல்வரைப் பெற்றிருக்கின்ற அற்புத மக்களாகிய நாங்கள் கடவுளின் வரமாய் கிடைக்கப்பெற்றிருக்கின்ற எங்கள் அன்புத் தாய், தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்நாளில், எங்கள் பிறவிப் பயனையும் நாங்கள் சேர்த்துக்கொண்டிருக்கிறோம் என்ற பெருமையோடு வாழ்ந்து, நாங்கள் நல்ல நன்றியையும், விசுவாசத்தையும் காட்டி உயிருள்ளவரையும் மாண்புமிகு அம்மா தங்கள் பொற்பாதம் பணிந்து வாழ்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்காக 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் ரூபாய் 4.5 கோடியில் செயல்படுத்தப்படும் என்பதை அறிவிப்புச் செய்து, இந்த நாட்டு மக்களுடைய மனங்களிலே, நின்று நடமாட முடியாத குழந்தைகளுக்கும் நடமாடும் மருத்துவ சிகிச்சைப் பிரிவு கிடைக்கச் செய்கின்ற அன்புத் தாயாய் தாங்கள் இருக்கிறீர்கள் என்பதை நிரூபித்துக் காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்களுக்கு எங்கள்

உயிருள்ளவரையிலும் நன்றி கலந்த விசுவாசத்தை நாங்கள் தெரிவித்துக்கொண்டிருப்போம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனது பர்கூர் சட்டமன்றத் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சியில், சாதிநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யும் என அறிவித்திருக்கின்ற மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நாங்கள் வாழ்த்தி வணங்குகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் எனது தொகுதிக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்ற இந்தக் கால்நடை மருத்துவமனைக்கு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் நீண்ட நாட்களாக சிறப்பாகச் செயல்பட்டுவந்த கூட்டுறவு கால்நடைத் தீவன உற்பத்தி நிலையம் தற்போது சில நாட்களாக மூடிக் கிடக்கிறது. அரசின் விலையில்லா ஆடு, மாடு வழங்கும் திட்டத்தால் தற்போது கால்நடைத் தீவனங்களுக்கு நல்ல தேவை உள்ளது. எனவே, அரசு இந்தக் கால்நடை தீவன உற்பத்தி நிலையத்தை மீண்டும் செயல்படுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைத் தீவன உற்பத்தி சம்பந்தமாக நிறைய விவரங்கள் சொல்லவேண்டியிருப்பதால், உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 464, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.